# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 10.09.2024 | supeedsam.com | supeedsam@gmail.com


## மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல்;

# நினைவுத்தூபியில் கல்வெட்டு பதிப்பதை தடுத்து குழப்பம் விளைவித்த பொலிஸார்









## இராணுவமும் குவிப்பு

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபியை புனர்நிர்மானம் செய்து, அதில் இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டவர்கள் என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நேற்று திங்கட்கிழமை (09) பதித்துக் கொண்டிருந்தபோது, இக்கல்வெட்டை பொலிஸார் பலவந்தமாக அகற்றி, அங்கு புனரமைப்பு செய்யவிடாமல் தடுத்துள்ளனர்.

அதனையடுத்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதில் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியுள்ளது.

அத்துடன், அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள்

02 ஆம் பக்கத்தில்...

# வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதில் பெரும் குழப்பம்

## தமிழரசு கட்சியின் சிறப்பு குழு நாளை கூடுகின்றது




இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவால் நியமிக்கப்பட்ட சிறப்பு குழு இன்று வவுனியாவில் கூடவுள்ளது.

இதன்படி, மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் பா.சத்தியலிங்கம் ஆகியோர் கூடி கலந்துரையாடவுள்ளனர்.

இந்த சந்திப்பு தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் பா.சத்தியலிங்கத்தின் வவுனியா அலுவலகத்தில் கூடவுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது உறுதி

## கொள்கை பிறழுப்போவதில்லை என்கிறார் சிறீதரன்



தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில் உறுதி என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில்

தான் உறுதியாக இருப்பதாகத் தெரிவி

02 ஆம் பக்கத்தில்...

# விகாரைகளுக்காக கபளீகரம் செய்யப்படும் தமிழர் நில பரப்பு

## மண்மீட்பிற்காக அனைவரும் அணிதிரள வேண்டும்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்து விவசாயம் செய்த 41,000 ஏக்கர் காணிகளை வன இலாகா திணைக்களம் கையகப்படுத்தி உள்ளதாகவும், துறைமுக அதிகார சபையும் காணிகளை கையகப்படுத்த முனைவதாகவும் குச்சவெளியில் 31 விகாரைகள் கட்டுவதாகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை வெளிக்காட்ட வேண்டும்

## கோருகிறார் அரியநேத்திரன்



தென்பகுதி வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்கு எமது தலையில் நாமே மண் அள்ளிப்போடும் செயல் என தமிழ் பொது கட்டமைப்பின் வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

02 ஆம் பக்கத்தில்...


## சஜித் பேரணியில் திடீர் விபத்து:

# ஐந்து பொலிஸார் மருத்துவனையில் அனுமதி

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து, கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக பேரணி ஆரம்பிக்கப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக ஆதரவாளர்கள் பெருந்தொகையான பட்டாசுகளை வெடிக்கச் செய்ததில் பொலிஸார் 5 பேர்

02 ஆம் பக்கத்தில்...

# துறைநீலாவணையில் மாணவர்கள் கௌரவிப்பு





(இ.சுதாகரன்)

துறைநீலாவணை வரையறுக்கப்பட்ட சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் கடந்த இரண்டு மாதங்களாக ஞாயிறு தோறும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கல்வி கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடாத்தி வந்தது.

அந்தக் கல்விக் கருத்தரங்குகளின் தொடர்ச்சியின் இறுதி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

தொடர்ச்சியாக இந்த கல்வி கருத்தரங்கினை நடார்த்திச் செல்வதற்கு உதவி புரிந்த அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு துறைநீலாவணை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் தலைவரும் தொழில்நுட்ப உத்தியோகத்தருமான இலட்சுமணன் சுதர்சன் அவர்களுடைய தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் துறைநீலாவணை பாடசாலைகளின் அதிபர்களும், கருத்தரங்குகளை நடாத்துவதற்கு நிதி அனுசரணை புரிந்தவர்களும், வளவாளர்களும், சிக்கன கூட்டுறவு சங்க அதிகாரி (CDO) பரசுராமன் சுரேஷ்குமார் அவர்களும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட மாதிரி பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற மாணவர்கள் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வினை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் ம.சதீஷ்குமார் அவர்கள் தொகுத்து வழங்கினார். செயலாளர் பு.சக்தன் அவர்களுடைய நன்றியுரைடன் நிகழ்வு நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சஜித் பேரணியில் திடீர் விபத்து; ஐந்து...



உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்போது கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு கடமைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக பொதுமக்களில் இருவரும் காயமடைந்தனர். விபத்து இடம்பெற்ற போது கடமையில் இருந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச பங்கேற்றுள்ள மேற்படி பேரணி கண்டியில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

# சரஸ்வதியில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா







( வி.ரி. சகாதேவராஜா)

பெரிய நீலாவணையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இவ் விழாவை நடாத்தியது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி வை.இராமநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலையக்கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர் .

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை சமயப்பற்றாளர் திருமகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்திற்கு வழங்கி வைத்தார் . இதனை பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கி வருகின்றனர். ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

இது பன்னிரண்டாவது பாடசாலை நிகழ்ச்சி திட்டமாகும்.

## தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை ...

இன்று பரவலாக பேசப்படுகின்ற மூன்று தென் பகுதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் அளிக்கின்ற வாக்குகளானது எமது தலையில் நாமே மண்ணை அள்ளிக் கொட்டுவதற்கு சமமாகவே இருக்கும் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை.

இதில் சஜித் பிரேமதாச ஆயிரம் விகாரைகளை கட்டுவதாக தெரிவித்து இருக்கின்றார். இந்த நிலையில் யாரோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது பன்சலைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாகத் தான் இருக்கும்.

அதேபோல் ரணில் விக்ரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ஒரு கட்டமைப்பாக ஒரு தேசமாக, ஒரு இனத்தின் விடுதலையாக இருந்த எம்மை சிதைத்த பெருமை அவரைத் தான் சாரும்.

அதே போல் அனுரகுமார திசாநாயக்க எமது இணைந்த வடக்கு கிழக்கை பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களை தென் பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம் கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

ஆகவே இந்த பொதுக் கட்டமைப்பு ஊடாக ஒரு செய்தியை சொல்வதற்காகவே நான் வந்திருக்கின்றேனே தவிர ஒரு ஜனாதிபதியாக வருவதற்கோ அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்த கதிரையை பிடிப்பதற்காகவோ இல்லை. ஈழ மண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காகவும் நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கும் இந்தியாவிற்கும் தென் இலங்கைக்கு ஏன் ஒன்பதாவது ஜனாதிபதியாக வர இருக்கின்றவருக்கும் அந்தத் தகவலை நாங்கள் கொடுக்க இருக்கின்றோம். எங்களுடைய வடக்குக் கிழக்கில் ஒரு இனமாக ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்டமைப்புக்குள் சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவை தெரிவிக்கின்றது என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் அவர்களுக்கு சொல்லி இருக்கின்றோம். அடுத்த 13 நாட்களுக்கு பல போலியான செய்திகள் என்னை பற்றி வரலாம். இருபதாம் திகதி கூட அரியநேத்திரன் இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற செய்தி கூட இந்த சமூக வலைத்தளங்களின் ஊடாக வெளிவரலாம். ஆனால் நான் எந்த விதமான மாற்றத்திற்கும் உட்பட போவதில்லை.

ஆகவே நீங்கள் சங்குக்கு போடுகின்ற புள்ளடியானது எமது இனத்திற்கான புள்ளடி எமது விடுதலைக்கான புள்ளடி எமது மண் மீட்புக்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயல்படுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது உறுதி

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக சிறீதரன் அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த மாதம் 29ஆம் திகதி லண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சிறீதரன், அங்கு முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் ஓரங்கமாக இரு தினங்களுக்கு முன்னர் பிரித்தானிய வாழ் புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய சிறீதரன், ‘ஈழத்தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியல் பணியாற்றுவதற்காகவே நான் இணைந்துகொண்டேன்.

எனது அரசியல் பயணத்தையும், அது சார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் இறுதி வரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன்’ என்று தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் தான் உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தினால் திருகோணமலையில் சிறப்பு நிகழ்வு..!

(அ . அச்சுதன்)

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளடக்கிய ஆட்சிக்கான குடிமக்களின் குரல் மற்றும் முன்முயற்சி திட்டத்தின் கீழ் எதிர்வருகின்ற தேர்தலை மையப்படுத்திய பிரஜைகளால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை திருகோணமலை மாவட்ட உள்ளூர் அரசியல்வாதிகள், ஊடகவியளாளர்களுடன் பகிர்ந்து கொள்ளல் நிகழ்வு (09) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திருகோணமலை உப்புவெளி கிறீன் கார்டன் ஒன்று கூடல் மண்டபத்தில் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புஹாரி முகமட் தலைமையில் இடம் பெற்றது.

வளவாளராக சட்டத்தரணி எம். எம். அஸாட் கலந்து சிறப்பித்தார்.



## விகாரைகளுக்காக கபளீகரம் செய்யப்படும் தமிழர் நில பரப்பு

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனை வரவேற்று, கௌரவிக்கும் நிகழ்வு மூதூர்-பட்டித்திடல் பிரதேசத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

உரிமைப் பிரச்சினை, அபிவிருத்தி பிரச்சினை இதில் உரிமை தான் முக்கியம் பாராளுநாடாளுமன்ற உறுப்பினராகி 7 வாரங்களில் ஐந்து கோடிக்கு மேல் இம்மாவட்டத்தில் அபிவிருத்தி பணிகளை செய்துள்ளேன்.

யாருக்கும் விலை போகாது அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு வருகிறேன். நானும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் என்கின்ற வகையில் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ளேன் அபிவிருத்திகளை விடவும் உரிமைகளை பெறுவதே முக்கியமாக காணப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து விவசாயம் செய்த தமிழ் மக்களுடைய காணிகளை அடாத்தாக வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், துறைமுக அதிகார சபை என மொத்தமாக 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய காணிகளை கபளீகரம் செய்துள்ளனர். எல்லைநிர்ணய ஆணைக்குழு சில பகுதிகளை வேறு பகுதிகளுடன் சேர்த்துள்ளது. குச்சவெளியில் 31 விகாரைகள் கட்டுகின்றனர். இதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் வழங்கப்பட்டுள்ளன இவ்வாறாக தனிநபர் காணிகளை பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள் இதனை மீட்க அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதில் பெரும் குழப்பம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து அறிக்கை வெளியிடும் நோக்கில் இந்த சிறப்பு குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நாளை கூடி ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது முடிவுசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஜனதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதில் இலங்கை தமிழரசு கட்சிக்குள் கடும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வவுனியாவில் கூடிய தமிரசு கட்சியின் மத்திய குழு, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பதாக கூறியிருந்தது.

எனினும், இந்த தீர்மானத்தை மறுத்திருந்த கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மறுநாள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தார்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசிய மாவை சேனாதிராஜா, ஜனாதிபதி தேர்தலில் ரணிலி வெற்றிபெற வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், தமிழரசு கட்சியின் சி.சிறீதரன் உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவு வழங்க முடிவுசெய்துள்ளனர்.

இந்நிலையிலேயே, ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குது என்பது தொடர்பில் தமிழரசு கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த குழப்பங்களை தணிக்கும் நோக்கில் நாளை சிறப்பு குழு கூடி இறுதி முடிவை எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் 14ஆம் திகதி தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை எடுப்படும் தீர்மானம், மத்திய குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல்;

உட்பட 7 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

1990 செட்டெம்பர் 9ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் முதலான பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்குட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 பொதுமக்கள் இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் ஒட்டுக்குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டு 34வது நினைவேந்தல் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நினைவேந்தலை முன்னிட்டு சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்ட படுகொலை செய்யப்பட்டவர்களின் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான முன்னாயத்த வேலைகளை செய்துகொண்டிருந்தனர்.

இதன்போது 1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 186 அப்பாவி பொதுமக்கள் என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மற்றும் உயிரிழந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நினைவுத்தூபியில் பதித்துக்கொண்டிருந்தனர்.

அவ்வேளை அங்கு சென்ற கொக்குவில் பொலிஸார், இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஒட்டுக்குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட என குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டை பதிக்க முடியாது என கூறி கல்வெட்டை பதிக்கவிடாமல் தடுத்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்த பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அப்போது பொதுமக்கள், இது 1995 சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது ஓய்வுபெற்ற நீதியரசர் கே.பாலிகிட்ணன் தலைமையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அதில் பாதிக்கப்பட்ட மக்களும் அதில் உயிர் தப்பியவர்கள் பலரும் இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் படுகொலை செய்ததாக சாட்சியமளித்து, அவை ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் யாரால் படுகொலை செய்யப்பட்டது என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை ஏன் பதிக்கக் கூடாது என பொதுமக்கள் கேள்வியெழுப்பி வாதம் செய்தனர்.

இந்நிலையில் தொடர்ந்தும் கல்வெட்டை பதிக்கவிடாது பொலிஸார் தடுக்க முற்பட்டபோது அதனை மீறி கல்வெட்டு பதிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது அங்கு நின்ற பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட 7 பேரை அங்கிருந்து இழுத்துச் சென்று ஜீப் வண்டியில் ஏற்றியுள்ளார்.

அத்துடன் கல்வெட்டு பதிக்கும் வேலையை செய்துகொண்டிருந்த மேசனை இழுத்துத் தள்ளி, கல்வெட்டை அகற்றியதில் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து ஜீப் வண்டியில் ஏற்றப்பட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பின்னர் இறக்கிவிடப்பட்டனர்.

அதேவேளை அங்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# உலகின் முக்கிய சுற்றுலாத் தலமாக மட்டக்களப்பு அபிவிருத்தி செய்யப்படும்

வாகரை தொடக்கம் காத்தான்குடி வரையிலான பாரிய சுற்றுலா வலயமொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு உலகின் பிரதான சுற்றுலாப் பிரதேசமாக மாறும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்குடா பிரதேசத்தில் (08) முற்பகல் இடம்பெற்ற ''இயலும் 'ரீலங்கா'' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். முற்போக்குத் தமிழர் கழகம் இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இந்த மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சஜித்துக்கும் அனுரவுக்கும் சரியான கொள்கை இல்லை.

அவர்கள் பேசிக்கொண்டிருப்பதை மாத்திரமே செய்கிறார்கள் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு அவர்களிடம் தீர்வுகள் இல்லை எனவும், பிரச்சினைகள் ஏற்படும் போது ஓடிவிடுவதாகவும் தெரிவித்தார்.

எனவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நாட்டுக்காக மக்கள் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி எரிவாயு சிலிண்டரை வெற்றியீட்டி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தை வலுப்படுத்துமாறு அனைத்து மக்களிடமும் கேட்டுக்கொண்டார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது:

''2022 இல் நான் இந்த பகுதிக்கு வந்த போது நீண்ட வரிசை இருந்தது. பல பகுதிகளுக்கும் சென்றேன்.

நீங்கள் அனைவரும் வரிசையில் இருந்தீர்கள். இந்த வரிசையுகத்தை நிறைவு செய்ய முடிவு செய்தேன். 2023 இல் நான் வரும் போது வரிசைகள் இருக்கவில்லை.

விவசாயிகள் என்னிடம் உரம் கேட்டார்கள். அதனை நான் பெற்றுக் கொடுத்தேன். நீங்கள் சிறந்த விளைச்சலைப் பெற்றுத் தந்தீர்கள்.

இவ்வாறு தான் நாட்டை முன்னேற்றினோம். நீங்கள் அனைவரும் கஷ்டப்பட்டீர்கள். மீண்டும் அந்த நிலைக்குச் செல்ல வேண்டுமா?

நெருக்கடியை போக்க சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றோம். நிபந்தனைகளுடன் உதவி கிடைத்தது. உதவி பெற வேறு வழியிருக்கவில்லை. இந்தியாவிடமிருந்து 3.5 பில்லியன் கிடைத்தது. அது தவிர வேறு வழி எதுவும் இருக்கவில்லை. கடினமான முடிவுகளை எடுக்க நேரிட்டது. வரியை அதிகரிக்க




நேரிட்டது. விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

எவ்வாறு முன்னோக்கிச் செல்ல இருக்கிறோம் என்பது இந்த தேர்தலிலே முடிவாகும். பிரச்சினைகள் வந்த போது மற்ற தலைவர்கள் ஓடுகையில் நான் மட்டுமே முன்வந்தேன். இவர்களை நம்ப முடியுமா? பாராளுமன்றத்தைக் கலைகுமாறு கோரினார்கள். தேர்தலை நடத்தச் சொன்னார்கள்.

இவ்வாறு பல நொண்டிச்சாக்குகளைக் கூறினார்கள். இவர்கள் கூறியதைப் போன்று 2022 இல் தேர்தலை நடத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும். பிரச்சினை தீருமா? அல்லது சிக்கல் ஏற்படுமா? பங்களாதேஷத்தைப் போன்று நாடு மாறியிருக்கும்.

சஜித் வந்து மேடைகளில் பேசுகிறார், பேசுகிறார். பேசிக்கொண்டே இருக்கிறார். எந்த தீர்வும் அவரிடமில்லை. இவ்வாறனவர்களுக்கு எவ்வாறு தீர்வு வழங்க முடியும். அடுத்த 5 வருடங்களுக்கான 'இயலும் 'ரீலங்கா' திட்டம் எம்மிடமுள்ளது. 5 அம்சங்களில் அதில் பிரதானமானவை.

வாழ்க்கைச் சுமையை இலகுபடுத்த வேண்டும். வரியைக் குறைப்பதாக சஜித்தும் அநுரவும் சொல்கிறார்கள். வரியை குறைத்தால் வருமானம் குறையும். கடன் பெறுவதாக அவர்கள் சொல்கிறார்கள். 2019 இல் கோட்டாபய வரியைக் குறைத்தார். 2022 இல் நாடு வீழ்ச்சியடைந்தது. அந்த நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டுமா?

பெண்களுக்குத் தான் அதிக பிரச்சினை ஏற்பட்டது? பெண்களின் உரிமைகள் செயற்படுத்தப்படுவதில்லை. பெண்களை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பெண்கள் வீடுகளில் எதிர்கொள்ளும் வன்முறைகளை தடுக்க சட்ட ஆலோசனை மற்றும் மருத்துவ சேவை நிலையங்களை அமைக்க இருக்கிறோம்.

குடித்து விட்டு வீட்டுக்கு வந்து குழப்பம் செய்யும் ஆண்கள் இனி கவனமாக இருக்க வேண்டிவரும். பெண்களின் மரியாதையைப் பாதுகாக்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் விவசாய நவீன மயமாக்கலை மேற்கொண்டு நவீன விவசாயத்தில் ஈடுபவோருக்கு கடனுதவி வழங்க இருக்கிறோம்.

மீன்பிடித்துறையிலும் நவீன தொழில்நுட்பத்தை வழங்க இருக்கிறோம். கைத்தொழில் வலயங்கள் மற்றும் முதலீட்டு வலயங்களை ஆரம்பிக்க இருக்கிறோம்.

திருகோணமலையில் ஒன்றை ஆரம்பிப்போம். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இங்கு கொண்டு வர இருக்கிறோம். டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை மட்டக்களிப்பில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

இந்தப் பிரதேசத்தை சுற்றுலா வலயமாக முன்னேற்றுவோம். 1977 இல் நான் இங்கு வந்த போது தேவநாயகம் அமைச்சராக இருந்தார்.

நல்லையாவைப் பற்றியும் அறிந்திருந்தேன். எனது தந்தை ஹோட்டலொன்றை ஆரம்பித்தார். அதற்கு அருகில் தான் பிள்ளையானின் கிராமம் இருந்தது.

கல்குடாவில் அனைத்து இடங்களுக்கும் சென்று வந்துள்ளேன். வாகரை முதல் காத்தான்குடி வரை பாரிய சுற்றுலா வலயமொன்றை இங்கு உருவாக்குவேன்.

ஹிங்குரக்கொட விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இருக்கிறோம். இப்பகுதிக்கு வர அது இலகுவாக இருக்கும்.

சுற்றுலாத்துறையுடன் தொடர்புள்ள பயிற்சிகளை வழங்குவோம். சம்பிரதாய நடனங்கள், கப்பிரிங்ஞா, சம்பிரதாய முஸ்லிம் நடனங்கள், நவீன நடனங்கள், வாத்தியக் குழுக்கள், சுவையான உணவுகள் என பல விடயங்கள் எமக்குத் தேவைப்படும். அவ்வாறு தான் சுற்றுலாத்துறை முன்னேறும்.

இப்பகுதியில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ள இருக்கிறோம். மட்டக்களப்பு பிரதேசத்தை உலகில் தலைசிறந்த சுற்றுலாப் பயண வலயமாக மாற்ற எம்மால் ''இயலும்''. சஜித்தினால் அல்லது அநுரவினால் அதனை செய்ய முடியும்.

கேஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இன்றேல் கேசும் இல்லை சுற்றுலாத்துறையும் இல்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

---

# வாக்குகளை வீணடிக்க வேண்டாம்!




தோல்வி அடைவேன் என்பதை ஏற்றுக்கொண்ட வேட்பாளராக உள்ள ரணில் விக்ரமசிங்க தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளமையால் அவருக்கு வாக்களிக்காது, அந்த வாக்கை தனக்கு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். ரணிலுக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம். அநுரவுக்கு வாக்களித்து கொளுத்துகின்ற கலாச்சாரத்தை ஆதரிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுடைய பிரச்சினை ஜனாதிபதிக்கு தெரிவதில்லை. ஜனாதிபதியின் உயிர்துடிப்பு தற்பொழுது அநுரவிடமே சென்றிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் தற்பொழுது அனுரகுமாரவின் ஊன்றுகோலாக மாறியிருக்கின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 40 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 8 ஆம் திகதி வெளிமடையில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுடைய அறுவடை மேற்கொள்ளப்படுகின்ற போது வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கும் வெங்காயமும் இறக்குமதி செய்கின்ற மனிதாபிமானமற்ற அரசாங்கமொன்றே இருக்கின்றது. எனவே விவசாயிகளும் நுகர்வோரும் பாதுகாப்படைகின்ற வகையில் புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குளிரூட்டி வசதிகள் ஆரம்பிக்கப்படுவதோடு பால் உற்பத்தியாளர்களையும் மிளகு உற்பத்தியாளர்களையும் பாதுகாப்போம். பச்சை வீட்டு நிர்மாணத்திற்காக சலுகை அடிப்படையில் கடன் வழங்குவோம். பூக்கள் உற்பத்திக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

செல்வந்தர்களுக்கு வரிச்சலுகை வழங்குவதற்கு மாத்திரமே ரணிலுக்குத் தெரியும்,

இவற்றையெல்லாம் செய்ய முடியாது என்று ரணிலும் அநுரவும் கூறினாலும், வரிச்சலுகை வழங்குவதற்கும் கடனை இரத்து செய்வதற்கும் பணம் இருக்கின்றது. கடனையும் வட்டியையும் இரத்து செய்து செல்வந்தர்களுக்கு தேவையான விதத்தில் செயல்படுகின்ற இந்த அரசாங்கத்தை விரட்டி அடிப்பதற்கு ஒன்றிணையுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சிறந்த கையால் அநுர,

தேசிய கடனை மறுசீரமைப்பு செய்கின்ற போது உகஊ, உகூஊ பணத்தை திருடிய அரசாங்கத்தின் சிறந்த கையாளாக ஜேவிபியின் அனுரகுமார திசாநாயக்க காணப்படுகின்றார். நாட்டை வங்கரோத்தடையச் செய்த ராஜபசக்களுக்காக சஜித் பிரேமதாச ஒருபோதும் கூலிக்கு கோஷம் போட்டதில்லை. பதாகைகளை ஒட்டவில்லை. தலதா மாளிகையில் ராஜபக்ஷகளுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால் அநுர குமார திசாநாயக்க அதனை செய்திருக்கின்றார். அவர்கள் விவசாய, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சுகள் உள்ளிட்ட இராஜாங்க, பிரதி அமைச்சு பதவிகளையும் பெற்று இருக்கிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சிறந்த குழு எம்மோடு இருக்கின்றது,

நாட்டை கட்டியெழுப்பக் கூடிய சிறந்த குழு எம்மோடு இருக்கின்றது. ஜனாதிபதிகள் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். தான் ஜனாதிபதியான உடன் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் பெறாத ஜனாதிபதியாக அர்ப்பணிப்புடன் செயல்படுவேன். ஊதியம் பெறாத தன்னார்வ சேவையாக எனது சேவையை நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

---

# ரணில் இனவாதத்தைத் தூண்டுகின்றார்!

யாழ்ப்பாணத்தில் தாம் கூறிய கருத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திரிபுபடுத்திக் கூறியமைக்கு மன்னிப்புக் கோர வேண்டும் என, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

நான் தமிழர்களை அச்சுறுத்துவதாகவும் அதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் பிரசாரம் செய்துள்ளார்.

இவ்வாறான அரசியல் நடவடிக்கை




கள் மூலம் ரணில் விக்ரமசிங்க இனவாதத்தைத் தூண்டுவதற்கு முனைந்துள்ளார். நடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏற்கனவே தகுந்த பதிலை தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் சரியான பதிலை ஏற்கனவே வழங்கியுள்ளதால் நான் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பதிலளிக்கவேண்டியதில்லை. நாட்டில் இனவாத பிரசாரங்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ரணில் விக்ரமசிங்க அண்மைக்காலமாக என்னைத் தோழர் எனக் குறிப்பிட்டு வருகின்றார். இவ்வாறு நட்பு பாராட்டுவதன் மூலம் ஒருபோதும் அவரின் தவறுகளை மூடிமறைக்க முடியாது.

மேலும், மத்திய வங்கி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தப்படும். மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்படும் இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

---

# வாக்காளர் அட்டை கிடைக்கவில்லையா?

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வாக்காளர்கள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமாக இருந்தால், வாக்களிக்க செல்லும் போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாதது பாதிப்பை ஏற்படுத்தாது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

'வாக்காளர் ஒருவருக்கு தனக்கான வாக்களிப்பு நிலையம் தெரியுமாக இருந்தால், உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணத்தை வைத்து உங்களால் வாக்களிக்க முடியும்' என்றார்.

மேலும், 'உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இருக்கும் போது வாக்களிப்பு நிலையம் மற்றும் எண் ஆகியவற்றை அடையாளம் காண வசதியாக இருக்கும். ஆனால் வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டாலும் அதைப் பற்றி அச்சம் கொள்ள வேண்டாம். வாக்காளர் அட்டை வாக்களிப்பதற்கு ஒருபோதும் தடையாக இருக்காது' எனவும் பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

# அநுரகுமார திருடர்களை இணைக்காமல் வெற்றி பெற முடியாது!

( பாறூக் ஷிஹான்)

அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளதாக செய்திகள் வெளியான வண்ணமுள்ளன.

எனவே, இதற்கான தெளிவான பதிலை சஜித்துடனுள்ள ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீனும் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்க வேண்டுமென ஸ்ரீலங்கா உலமாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் சமகால அரசியல் தொடர்பாக ஸ்ரீலங்கா உலமாக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மேலும் அச்செய்தி அறிக்கையில்,

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் சமூகத்தின் துரோகி என 2001 முதல் பகிரங்கமாகச் சொல்லி வருகிறேன். 2001 இல் அதாவுள்ளாவும் ஹக்கீமுடன் தான் இருந்தார்.

அப்போதெல்லாம் எங்களைத்தூற்றிய பழைய, புதிய முஸ்லீம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இப்போது ஹக்கீமைத் தூற்றுகிறார்கள். எனினும், உண்மை மிகத் தாமதமாகத்தான் புரிய வரும்.

அது போன்று தான் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற திருட்டுக்கட்சிக்காரர்களை சேர்க்க மாட்டோம் என ஜேவிபி அநுரகுமார பேசி வந்தார். ஆனால், இப்போது அதாவுல்லாவின் கட்சியில் மாகாண சபை உறுப்பினராக இருந்து பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அதன் தலைமை நிர்வாகத்திலிருந்த ஒருவரை தேசிய மக்கள் சக்தி தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.




அவ்வாறாயின், ஏமாற்றுக்கட்சியிலிருந்து கொண்டு சமூகத்தின் வாக்குகளை விற்று சுகபோகம் அனுபவித்த கட்சியின் அனைத்துச் செயல்களுக்கும் துணை போய் விட்டு இப்போது கட்சி மாறினால் நல்லவரா?

இப்படியானவர்களை தேசிய மக்கள் சக்தியில் இணைப்பதன் மூலம் தற்போது அநுரகுமார தன் கொள்கையிலிருந்து விலகி திருடர்களை இணைக்காமல் வெற்றியைப் பெற முடியாதென்ற நிலைக்கு வந்துள்ளாரா? என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இது தவிர, இதைத்தான் நாம் சொல்கிறோம் மாற்றமென்பது ஆட்களை மாற்றுவதால் ஏற்படாது. நல்ல அரசியலை உருவாக்கும் மன மாற்றம் மக்கள் மனதிலும் அரசியல்வாதிகள் உள்ளத்திலும் வர வேண்டும். பாத்திரங்கள் வேறு, கள்ளு ஒன்று தான். என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்சவின் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரி பெல்டி அடித்ததும் அவர் நல்லவராகி விட மாட்டார் என அப்போதே சொன்ன ஒரேயொரு முஸ்லிம் கட்சி உலமா கட்சியாகும்.

ஆனால், இல்லையில்லை என முஸ்லிம் சமூகம் மறுத்து செத்துப்போனவனும் வந்து மைத்திரிக்கு ஓட்டுப்போட்டான். கடைசியில் மஹிந்த ஆட்சியை விட மோசமானது ஹக்கீம், ரிசாத், தமிழ் கூட்டமைப்பு முட்டுக்கொடுத்த மைத்திரி ஆட்சி என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

மேலும், ஒரு கட்சியிலிருந்து சுக போகம் அனுபவித்து விட்டு சந்தர்ப்பத்துக்கு கட்சி மாறுபவன் நிச்சயம் பெரும் மோசடிக்காரன். இப்படியான இன்னும் பல மோசடிக்காரர்கள் தேசிய மக்கள் சக்தியில் (ஜேவிபி) இணைந்தால் மீண்டும் மைத்திரி ஆட்சி போல் திருட்டு ஆட்சியே ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## சமுத்திரத்தில் பாலையடி வாலவிக்னேஸ்வரரின் தீர்த்தோற்சவம்!!





( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று (8) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மகோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ சிவ பிரபாகரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெற்று சமுத்திரத்தில் சிறப்பாக தீர்த்தோற்சவம் இடம் பெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு மட்டக்களப்பு மாவட்ட செயலாளருடன் விசேட சந்திப்பு!!



எஸ்.எஸ்.அமிர்தகழியான்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலினை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரனை ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக கட்டடத்தில் சந்தித்து விசேட கலந்துரையாடலில் (09) திகதி ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் காண்காணிப்பாளர்களால் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் வீதிமிறல்கள், தேர்தல் கள நிலவரங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரனிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இது வரை மாவட்டத்தில் பாரிய தேர்தல்கள் வீதிமீறல்கள் இடம் பெறவில்லை என்பதுடன் சிறிய நடுத்தரத்திலான மிறல் இடம் பெற்றுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் இதன் போது குறித்த குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் காண் காணிப்பாளர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களினால் விளக்கம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவின் நீண்ட கால மேற்பார்வையாளரான சிசிலியா கீவேனி கருத்து தெரிவிக்கையில், இம்முறையுடன் இலங்கையில் தாம் 7 தடவைகள் தேர்தல்கள் கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தேர்தல்கள் வீதி மிறல்களை தலைமை காரியாலத்திற்கு அறிக்கையிட்டு வருவதாக தெரிவித்ததுடன், பழைய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற தேர்தல்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வினையும் குறித்த குழுவினர் கண்காணிப்பு மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தேசிய மட்டத்தில் பைத் போட்டியில் சம்மாந்துறை வலயம் முதலாமிடம்




( வி.ரி. சகாதேவராஜா)

தேசிய மட்ட முஸ்லிம் கலாசார போட்டியில் மர்ஹபா பைத் நிகழ்ச்சியில் சம்மாந்துறை வலய இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது .

இச் சாதனையை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பாராட்டியுள்ளார். இப்பாரிய வெற்றியை பெற்ற மாணவர்களை வாழ்த்துவதுடன் இப்போட்டியை இறுதிவரை வழிநடாத்திய உதவி அதிபர் ஏஎம்எஸ்.. இர்பானா க்கும் பாடசாலையின் அதிபருக்கும் ஏனைய வழிப்படுத்திய ஆசிரியருக்கும் வலயம் சார்பாக இஸ்லாம் பாட வளவாளர் மௌலவி ஏஜேஎம்.அஷ்ரப்( பலாஹி) நன்றிகள் தெரிவித்தார்.

## வீதி அதிகார சபை கவனிக்குமா?

எப்.முபாரக்

திருகோணமலை- ஹொரவ்பொத்தானை பிரதான வீதி ரொட்டவெவ பகுதியிலுள்ள பள்ளி வாயலுக்கு முன்னால் வீதி இரு பக்கங்களும் நிரப்புவதற்காக போடப்பட்ட கிரவல் கும்பத்தினால் பாதசாரிகளும் பிரயாணிகளும் அசௌகங்கரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மூன்று வாரங்களாக குறித்த கிரவல் போடப்பட்டிருந்த நிலையில் அது பரவப்படாமல் இருப்பதால் வேகமாக வரும் வாகன சாரதிகளினால் விபத்துகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

வீதியின் இரு பக்கங்களும் கிரவல் நிரப்பப்பட்டு செப்பெனிடப்படுவது வரவேற்கத்தக்கது.

ஆனாலும் போடப்பட்ட கிரவல் துணி செய்யப்படாமல் இருப்பதால் நடந்து செல்லும் பாதசாரிகள் மிகவும் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதேவேளை சிறு பிள்ளைகள் துவிச்சக்கர வண்டியில் செல்லுகின்ற போது விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளதாகவும் அப்பகுதியிலுள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபை மிக விரைவாக போடப்பட்ட கிரவலை அழகு படுத்தி அவசரமாக புணரமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.



# மூன்று பிரதான வேட்பாளர்களிற்குமான ஆதரவு 30 வீதத்திற்குள்ளேயே காணப்படுகின்றது

## இதுவரை தெளிவான வெற்றியாளர் இல்லை

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களினதும் ஆதரவு தொடர்ந்தும் 30 வீதத்திலேயே காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலிற்கு இன்னமும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் பிரதான வேட்பாளர்களின் பிரச்சாரங்கள் தீவிரமடைந்துள்ளன.

மூன்று பிரதான வேட்பாளர்களும் தாக்குதல்கள் பதில் தாக்குதல்களிலும், வாக்குறுதிகளை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் மூன்று பிரதான வேட்பாளர்களினதும் வாக்குறுதிகள் உச்சக்கட்டத்தை அடைந்தன. ஒவ்வொருவரும் சம்பள உயர்வு அரசதுறையினருக்கு பல நன்மைகள் போன்ற வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

புதன்கிழமை தபால்மூல வாக்களிப்பு ஆரம்பமானதே இதற்கான காரணம்.

தபால் மூல வாக்களிப்பு முடிவடைந்துள்ள நிலையில் ஒவ்வொரு முகாம்களை சேர்ந்தவர்களும் தங்களிற்கு அதிகவாக்குகள் பெரும்பான்மை வாக்குகள்கிடைத்திருக்கும் என தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்த முறை தபால்மூல



வாக்குகளில் அதிகளவானவற்றை அனுரகுமார திசநாயக்கவே பெறுவார் என தெரியவந்துள்ளது.

இதேவேளை பிரதான வேட்பாளர்களின் பிரச்சார பிரிவுகளின் தலைவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களினதும் ஆதரவு தொடர்ந்தும் 30 வீதத்திலேயே காணப்படுவதை வெளிப்படுத்தியுள்ளன. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமாரதிசநாயக்கவிற்கான ஆதரவு கிராமிய மட்டத்தில் தொடர்ந்து அதிகரிப்பதையும், சஜித் பிரேமதாசவிற்கான ஆதரவில் மாற்றம் இல்லாததையும் ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவு அதிகரிப்பதையும் சமீபத்தைய மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன. மூன்று பிரதான வேட்பாளர்களில் முதல் இருவருக்குள் இடம்பிடித்தால் மாத்திரமே ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புள்ளது என்பதையும்,தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு 45 வீத வாக்குகள் கிடைக்கலாம் என்பதையும் சமீபத்திய மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இதன் மூலம் தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் இதுவரை தெளிவான வெற்றியாளர் என எவரும் இல்லாத நிலை காணப்படுவது தெரியவந்துள்ளது.

# மட்டக்களப்பு ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னை திருத்தல திருவிழா கோடியிறக்கத்துடன் நிறைவு!!









**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

மட்டக்களப்பு ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை திருத்தலத்தின் 70வது வருடாந்த திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொடியிறக்கத்துடன் (8) திகதி நிறைவு பெற்றது.

கடந்த ஓகஸ்ட் 30ம் திகதி, ஆலய பங்குத்தந்தை வின்சென்ட் ஜெரிஸ்டன் அடிகளார் தலைமையில், கொடியேற்றம் ஆரம்பமாகிய வருடாந்த திருவிழாவில் தினமும் திருச்செபமாலை, மறையுரைகள் மற்றும் திருப்பலி என்பன நடைபெற்றன.

கடந்த (07) திகதி மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயம் மற்றும் செங்கலடி புனித நிக்லோஸ் ஆலயத்திலிருந்து அன்னையின் திருத்தலத்தை, பாதயாத்திரையாக மக்கள் சென்றடைந்தனைத் தொடர்ந்து மாலை மறையுரை, நற்கருணை வழிபாடு, திருச்சொரூப பவனி, விசேட திருப்பலி என்பன நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து (08) திகதி காலை 7.00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில், திருவிழா கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டார்.

ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில், ஆலய பங்குத்தந்தை வின்சென்ட் ஜெரிஸ்டன் மற்றும் அருட் தந்தையர்கள் இணைந்து விசேட கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

திருச்சொரூப பவனி, திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெற்று, கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெற்றது.

வவுணதீவு பிரதேச செயலாளர் திருமதி. ந.சத்தியானந்தி, 243 இராணுவ படைப்பிரிவு கட்டளை அதிகாரி பிறிக்கேடியர் சந்திமகுமார சிங்க உட்பட கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

திருவிழா திருப்பலி நிறைவில் ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை திருத்தல சிரேஸ்ட பங்கு சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியல் நிறுவகத்தின் 16 வது புகைப்படக் கண்காட்சி

## அரசாங்க அதிபர் ஜஸ்ரினா பிரதம அதிதி!





**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு பல்கலைக்கழக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் 16வது புகைப்படக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக வளாகத்தில் இடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி

BATTIMEDIA இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமாரினால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களே இங்கு காட்சிப் படுத்தப்பட்டன.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கெனடி புளோரன்ஸ் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

BATTIMEDIA அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள குறித்த புகைப்படக் கண்காட்சியில் விசேட அதிதியாக மட்டக்களப்பு - கல்லடி 243 வது இராணுவ படைப்பிரிவின் பிறிக்கேட் கொமாண்டர் சந்திம குமார சிங்க கலந்து சிறப்பித்ததுடன், புகைப்படக் கண்காட்சியினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

கடந்த 2024.09.06 திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப்புகைப்பட கண்காட்சியானது எதிர்வரும் 2024.09.18 திகதி வரை இடம் பெறவுள்ளது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் அனைத்தும் BATTIMEDIA இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமார் அவர்களினால் புகைப்படமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை சாஹிரா மாணவன் மாகாண மெய்வல்லுனர் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று சாதனை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியின் 14 வயது ஆண்கள் பிரிவில் 60 மீட்டர் ஓட்டப் போட்டி நிகழ்ச்சியில் கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஏ.ஆர்.எம். றிஹாப் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இப்போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது.

மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுக் கொண்டதன் மூலம் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகி கல்லூரிக்கு பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ள இம்மாணவனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்துள்ள பாடசாலை சமூகம், இவ்வெற்றிக்கு உறுதுணையாய் இருந்து ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபிர் மற்றும் பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்ஏ.எம்.அப்ராஜ் றிழா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்எம்.யூ.ஏ. சம்லி ஆகியோருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.




ஜனாதிபதித்
தேர்தல்
2024
மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்
077 664 5232 / 077 311 2601